# 3. திவ்விய சுப்பிரமணியம்.

**சீ**ரா ரருட்குரவ னாயுமிறை யாயுநாா்
செய்பவா்க் கெளிஞனாயுந்
திகழுன்னை முன்னிட்ட மாா்க்கத்தி னிற்கின்முற்
றீயவினை யான்மடமையாற்
சாரூறு களையவ்வவ் வமையத்தி னூறிநெறி
தந்தருளி லேநடத்தித்
தன்மயம தாமாறு கூடிக் கலப்பையது
தவறிடினு மறநிலைச்சீா்
சோரா தளித்தருள்வை யிவ்வதா் விடுத்தருட்
டுணையின்றி நாம்பரமெனச்
சொல்பதக ரெண்ணமெவ் வண்ணநிறை வேறுமவா்
துஞ்சில்வீழ் கதியானதுஞ்
சேராது போகுமோ போகாதிந் நெறியைய
சேத்திலா முழுமோசமே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 1

**நி**ன்மல நிராகார பூரணசை தன்யமா
நின்றவொன் றாயநீயே
நினைவுமற தியுமலா காரகண் டிதமுமா
நிற்கின்ற வுயிா்களென்ன

வன்மலக் கொடுமாயை யாலான தாநுவல்
வழக்கிழுக் காமன்றியும்
வழுத்துமா நின்மலப் பொருளழுக் காகுமேன்
மாசற்ற ஞானமதனால்
தன்மயப் பட்டசீ வன்பின்னு முன்னெனத்
தண்ணிய வசுத்தமாகத்
தான்வரற் கோர்தடையு மின்றாக லாலீது
தகுதிசா றீர்வையன்று
சின்மயப் படுமுனே பசுவென்று பயிலுமோர்
தீர்வையே தக்கதீர்வை
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 2

**உ**யிர்நிலை யடங்கலு மலிந்தவுணர் வான்மாவை
யுறழவெங் கணுநிறைந்தே
உள்ளபொரு ணீயெனவு மவ்வுடலி லறிவிக்க
வுணர்கருவி போலுயிர்களும்
பயிலந்த வுடலிலறி வித்தாலு மறியாத
பரிசுள்ள வென்பெசந்தோல்
பாடலச் செந்நீர் புலாலாதி போலவே
பாசமா கியமாயையும்
அயர்வின்றி யுளவென்று மறியலா முடலொப்ப
வழியுமோ பாசமென்னின்
ஆதவன் முன்றிமிர மழியா தழிந்தமுறை
யாமிந்த வாளிகொண்டே
செயிரற்ற முத்தியினு முப்பொருள்க ளுண்டென்று
சித்தாந்த நூன்முறையிடுஞ்
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 3

**ஆ**ரணத் துபநிடத மகன்மாயை சத்தியமு
மன்றசத் தியமுமன்றென்
றறைமுடிவி லேசத்தி யமுமன் றெனச்சொற்ற
தாலதே பாசவிரிவின்

காரியக் கேடா மசத்தியமு மன்றெனக்
        கழறினது வேயந்தமா
    காரியக் காரண விருக்கையா மாகலிற்
        கதிகூறு மிருபக்கமும்
நேரணவு சமரச சுபாவமே யாமிந்த
        நிசமறி கிலாரிரண்டா
    நிகழ்த்தியே பொய்மெய் பிதற்றிவா தித்தலைவர்
        நிகமத்து முத்தியின்பந்
தீரமா நித்தமென் றறைதலா லனுபவ
        சீவனுண் டெனலுமொப்பாஞ்
    சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
        திவ்வியசுப் பிரமணியமே. 4

**மு**ன்னிலை யிருக்கிலே காகார மாயிலகு
        மோனபர நிட்டைகூட
    முடியா தெனுங்கட்டு நடுவைமுன் னிட்டுள்ள
        முப்புடி பொடிந்துபோமா
றுன்னையல தொருவத்து வில்லையது நீயென்
        றுரைத்தவே தத்தின்முடிவை
    உணராத வெளிறருஞ் செடிவினைக் கஞ்சா
        வுரங்கொண்ட வுள்ளுடையரும்
என்னைவிட வஃதில்லை யெந்நாளு நானிமல
        னென்செய்கை யென்செய்கையன்
    றென்றே தனித்தனி பிதற்றியா தொருநூலி
        லேற்றகவி யும்படித்துச்
சென்னிவலி வந்தான் மருந்துதே டித்திரிவர்
        செப்புமிவர் சூழ்ச்சியவமே
    சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
        திவ்வியசுப் பிரமணியமே. 5

**தா**ம்புரண மாமுனே நாம்பிரம மெனுமுரண்
        சாற்றுவெற் றுரையருன்னைத்
    தாழ்ந்தறிந ரைப்பத்தி காண்டியென் றுந்தமைத்
        தடஞான காண்டியென்றும்

மேம்பட மிழற்றுவா ரங்஢னே யென்போல்வர்
　　மெய்யடிய ராயவப்பர்
　மேதகச் சீகாழி வள்ளன்முத லாயினார்
　　மெய்யறிஞ ரலரோவெனின்
நாம்பகரு மாறவர்க ளும்பத்தி காண்டியென
　　நவிலுவா ரிந்தஞாயம்
　நந்தும்விப சாரிபதி விரதையை விபசார
　　நாரியென் றெள்கலொக்கும்
தேம்பெருகு மின்னமுத வனுபவத் தடியவர்க
　　டேர்பரம நிட்டைமுதலே
　சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
　　திவ்வியசுப் பிரமணியமே. 6

**அ**த்துவித நூற்கருத் தோராது மோசமுற
　　வத்துவித மோதுவார்பால்
　அருமறைச் சென்னியின் றுணிவாக வுளவாக
　　மாந்தநூல் பார்த்ததுண்டோ
புத்தியுடை யீரெனா வினவிலந் நூல்சொனார்
　　பூதலத் தேவர்துவிதப்
　போக்கா யிருக்குமோ வெனவினவு வாரினோர்
　　போல்வரோ வொன்றிரண்டாக்
கத்துவள் ளரிசியுங் குழைதலும னற்பதக்
　　கதழ்வாய மௌனமுடிவைக்
　காணுநர்சொ னாலுமுசு நேரவே தாமுனங்
　　கற்றமுரண் விடுவதரிதால்
சித்தசம ரசமுற்ற பக்குவர்கள் சமரசத்
　　தீர்வையில் விளங்குதெளிவே
　சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
　　திவ்வியசுப் பிரமணியமே. 7

**மு**ந்தைநா ளிற்சாரு வாகனுல காயதன்
　　முதலியோர் சீவேசுரர்
　முக்காலு மிலருலகு மெய்யென் றலிற்பொருண்
　　மூன்றனு ளிரண்டுகூறும்

இந்தநா ளிற்கலா மானது விளைத்தணங்
கின்றதே நாமென்பர்தாம்
இயமான னைப்பந்த பாசத்தை யுண்டென்
றிசைத்தலின் மூன்றுளொருகூ
றுந்துமன சுறுசுத்த நாத்திகர்க ளாவர்நா
னுள்ளபடி யோர்ந்தமட்டில்
ஓவாத வுன்னைமுன் னிட்டுளவெம் மார்க்கமு
முத்தமஞ் சாலுமென்றன்
சிந்தைகுடி கொண்டபர தெய்வமே யெங்குமொரு
தீர்வையா யுள்ளமுடிவே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 8

**நூ**லெனும் பெயர்கொண்ட முறைகள்பல வுளுநன்
னுவற்சிகொண் முதனூல்களா
நுவல்சைவ தந்திரமு மறையுமே பிரதான
நூல்களா மறையினுட்பஞ்
சாலவெளி யாமாறு சாற்றுபிர சன்னமே
சைவசித் தாந்தமாகுஞ்
சற்சனர்க ளிதையொப்பி யுய்வதற் கைந்துவய
தாகும்வரை மூரிமூங்கை
போலவாய் பேசா திருந்துளோ னுன்னருட்
பொலிவினல் வாய்மலர்ந்தே
புகன்றசெந் தூர்க்கந்தர் கலிவெண் டிருச்செயுட்
பொருளாக மாந்தமுடிவின்
சீலமல் லாதுபிற ரத்துவித மன்றெனத்
திகழல்கிழ மைக்கரியரோ
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 9

**ஒ**ன்றெனு மபேதமு மிரண்டெனும் பேதமு
முறாமௌன சாந்தவோய்வை
ஒதொண்மை யத்துவித மோதாது முரணோதி
யுலகைக் கெடுக்கும்வினைஞர்

நன்றுசொல் சித்தாந்த மார்க்கத்தை யுள்ளுக்கு
ணாடிநா நிற்குநிலையின்
நமனாணை செல்லா தெனுந்துணிபு கொண்ணடையை
ஞாலத்தி னன்குநோக்கின்
வென்றியை விரும்பரவ கேதனன் சூழ்ச்சியையும்
வேட்கையையு மொக்குமிந்த
வீணாய புள்ளுவ மகம்புறனு மொத்துள்ள
மெய்யர்கணு முண்டுகொல்லோ
சென்றுவர லில்லெந்தை யருணகிரி யடிகளே
திளைகருணை யின்பநிலையே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே. 10